**தலைப்பு 247 – இலங்கை சுங்கம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சுங்கத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை சுங்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை சுங்கத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

இலங்கை சுங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **வருடாந்த நிதிக்கூற்றுக்கள்**<br>2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வருடாந்தம் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் | சுங்கத் திணைக்களம் 2017 ஆம் ஆண்டு வரை செலவுத் தலைப்பு 641 இன் கீழ் வருமானத்திற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் 247 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் தனியான ஒதுக்கீட்டுக் கணக்குமாக இரண்டு இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும், 2018 ஆண்டின் போது 267/2018 ஆம் இலக்க |

| | | |
|---|---|---|
| போதிலும் அவை 19 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுக்க வேண்டியிருத்தல் | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களாக மேற்கூறிய இரண்டு கணக்குகளையும் ஒரே படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எனினும், திறைசேரியில் காணப்பட்ட கட்டு நிதிக் கணக்கு நேரடியாக 247 ஆவது செலவுத் தலைப்பின் கீழ் அவற்றிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் சுட்டிக் காட்டுகின்றது.<br><br>அதற்கிணங்க இந்த இரண்டு தலைப்புக்களையும் ஒரே தடவையில் செம்மையாக்குவதற்காக ஏதாவது காலதாமதம் (முன் அனுபவங்கள் இல்லாததனால்) தேவைப்படுவதனாலும் திறைசேரியின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததனாலும் மேற்கூறிய தாமதம் ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தாமதம் ஏற்படாமல் இருக்க கவனம் செலுத்துவதாக தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். |

**1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்கியிருக்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத் தேவைப்பாடுகளை மீறிய சந்தர்ப்பம் கீழே தரப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி நிலைமை தொடர்பான கூற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் தயாரிக்கும் போது 2017 ஆம் ஆண்டிற்கான தகவல்கள் உரிய படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, நிதி நிலைமை தொடர்பான கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று 2017 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருக்காததனால் அத் தகவல்களை 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான படிவத்தில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. என்பதனை தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) நிதி செயலாற்றல் கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்று சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 20.03.03.01 ஆம் இலக்க (தண்டப் பணமும் பறிமுதல் செய்தலும்) வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானமாகிய ரூபா 420,073,711 தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கூற்றில் (ஏசீஏ – 1) அப் பெறுமதியானது பிழையைச் சரிசெய்தலாகக் காட்டப்பட்டிருந்தது. | வருமானத்தை இனங்காணல் மீளச் செலுத்துதல் அறிக்கையிடுதல் என்பவற்றின் போது சரியான நிலைமையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. ரூபா 420,073,711 தொகை வெளிப்படுத்துவதானது மீளச் செலுத்துவதாக வரவுப்பதிவின் மூலம் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தல்களின் பெறுமதியாகும். அவை வைப்புக் கணக்கினூடாக பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அடுத்துவரும் ஆண்டின் போது இதனை படிவங்களில் சரியான முறைமையில் பதிவு செய்வதற்கு குறித்துக்கொள்கிறேன். |

#### (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளாக காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 2,165,216,031 பெறுமதியில் செலவுத் தலைப்பின் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 5,064,750 பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது காசும் காசுக்குச் சமனானவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | கணக்குப் பொழிப்புக்களின் மூலம் பெறுவனவுகளாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 5,064,750 பணம் சுங்க வரி வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீகச் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் அல்லது நிர்மாணித்தல்களின் கீழுள்ள ரூபா 109,972,279 காசு உட்பாய்ச்சலாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

### 1.6.4 கணக்காய்வுச் சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | திணைக்களத்தின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (VII) இல் காணாமல் போன வவுச்சர்கள் எதுவும் இல்லை என அறிவிக்கப்பட்டிருந்தும் ரூபா 225,904,874 மொத்தப் பெறுமதியான 29 கொடுப்பனவு வுவுச்சர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | i | கணக்காண்டிற்கான அனைத்து கொடுப்பனவு வவுச்சர்களும் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (vii) இல் குறிப்பிடப்பட்டவாறு காணாமல் போன வவுச்சர்கள் எதுவும் இல்லையென்பது சரியானதாகும். காசோலைகள் வழங்கும் போது தாமதம் ஏற்பட்டுள்ளதனால் உரிய வவுச்சர்களை உங்களுக்குச் சமர்ப்பபிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் அந்த 103 வவுச்சர்களில் 74 வவுச்சர்கள் 2019 மே 29 ஆந் திகதி உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியானவற்றை தாமதிக்காது உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுமென தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். |
| | ii | வவுச்சர்கள் காணாமல் போயிருந்தால் நிதிப்பிரமாணம் 272(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் 1993 யூலை 21 ஆந் திகதிய 320 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | திணைக்களத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்தல் வேண்டும். அந்த முறைமையின் விளைதிறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமை வினைத்திறனாக பேணப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் அம் மீளாய்வாணது எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை ஆய்வு செய்து எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கிறேன். |
| (ii) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான காலத்துக்குள் தயாரித்தல் இடம் பெறுகின்றது என்பது கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 1.6.1 மற்றும் 3.2 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுங்கத் திணைக்களம் 2017 ஆம் ஆண்டு வரை வருமானத் தலைப்பு 641 இன் கீழ் வருமானத்திற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் 247 ஆம் தலைப்பின் கீழ் ஏனைய ஒதுக்கீட்டுக் கணக்குமாக இரண்டு இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்திருந்தன. எனினும், 2018 ஆம் ஆண்டின் போது 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களாக மேற்கூறிய இரண்டு கணக்குகளையும் ஒரே படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எனினும், திறைசேரியில் |

| | |
|---|---|
| கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற கட்டுநிதிக் கணக்கு நேரடியாக 247 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் அதற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மாத்திரம் கட்டுநிதிக் கணக்கில் சுட்டிக்காட்டப்படுகின்றது.<br><br>அதற்கிணங்க இந்த இரண்டு தலைப்புக்களையும் ஒரே தடவையில் செம்மையாக்குவதற்காக சில கால தாமதம் (முன் அனுபவம் இல்லாததனால்) தேவைப்படுவதனாலும் திறைசேரியின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததனாலும் மேற்கூறிய தாமதம் ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமலிருப்பதற்கு கவனித்துக் கொள்வதாக தயவாக தெரிவித்துக்கொள்கிறேன். |

### 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| **(i)** | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | | | |
| | 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2) (ஆ) பிரிவு | 16,0007,590,727 | வெகுமதி நிதியத்தியிருந்து வெகுமதிப் பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சின் சம்மதத்தினைப் பெற்றுக்கொண்டு அதற்காக பொருத்தமான நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் சுங்க வெகுமதிப் பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக | திணைக்கள பணிப்புரைகளுக்காக முறைப்படியாக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டது. என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல். | வெகுமதிப் பணத்தை செலுத்துவது சம்பந்தமாக 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவிற்கு இணங்க உங்களின் அவதானிப்புரைகளுடன் இணங்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட 1988 சனவரி 28 ஆந் திகதிய பிஎல் 118 ஆம் இலக்க திணைக்கள பணிப்புரைக்காக நிதி அமைச்சின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளாது 1999 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான 20 ஆண்டுகளில் ரூபா 16,007,590,727 தொகையான வெகுமதிப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | | 1988 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்க திணைக்கள பணிப்புரை வழங்கும் போது தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு அது வழங்கப்பட்டது என எண்ணிக்கொள்ள முடியும் என்பதுடன் மேலும் இது சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>--------------------------------------- | | | | |
| • XII ஆம் அத்தியாயத்தின் 1:2 ஆம் பிரிவு | | இலங்கை சுங்கத்தின் சில உத்தியோகத்தர்கள் விடுமுறை பெறும் போது பொது 125 படிவம் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பொது 190 விடுமுறைப் பதிவேட்டில் விடுமுறைகள் உள்ளடக்கப்பட்டு மேற்பார்வை உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தியிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பொது 125 படிவத்தின் மூலம் விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது தற்பொழுது உரியவாறு விடுமறை அங்கீகரிக்கப்பட்டு விடுமுறை பெற்றுக்கொள்ளப்படுதல் இடம்பெற்று வருகின்றது. |
| • XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தி | 3,997,823 | (i) ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடன் பணத்தை அறவீடு செய்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு பெற்ற மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | 3,997,823 கடன் மீதியில் 2018 மே 28 ஆந் திகதி வரை ரூபா 1,027,715 பணம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய கடன் மீதிகளையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 1,982,094 | (ii) | வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடன் பணத்தை தீர்த்து வைத்தல். ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர் சம்பந்தமாக தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,982,094 தொகையான இக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பரீட்சிப்பதற்குத் தேவையான ஆனால் பல ஆண்டுகள் பழைமையான இக் கோவைகளை ஆவணக் காப்பகத்தில் இது வரை மேற்கொண்ட பரீசீலனையின் போது தேடிக் கண்டு பிடிக்க முடியாதிருந்தது. மேலும் ஆவணக் காப்பகத்தைப் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் உரிய கோவைகளை தேடிக் கண்டுபிடித்ததன் பின்னர் உரிய அறவீடுகளை மேற்கொள்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். |
| | 603,580 | (iii) | சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடனை தீர்த்து வைத்தல் முறைப்படியாக கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |
| • XVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பந்தி | | | அரசாங்க உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் சம்பந்தமாக உரிய பிரிவுகளால் பேணப்பட்டு வருகின்ற வருகைப் பதிவேடு நாளாந்தம் பதவி நிலை உத்தியோகத்தரின் மேற்பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்தல் மற்றும் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறைப்படி நடவடிக்கை எடுத்தல். | வருகை மற்றும் வெளிச்செல்லல்களை சரியாகப் பதிவு செய்வதற்கும் உரிய முறைப்படி நாளாந்தம் ஒரு பதவி நிலை உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கும் உரிய உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது உரிய முறைப்படி வருகைப் பதிவேடு பேணப்பட்டு வருகின்றது. |

(iii) இலங்கை சனநாயக சோசலிசக்

| | | | |
|---|---|---|---|
| குடியரசின் நிதி பிரமாணக் கோவை<br>• நி.பி 85(1) (ஆ) | வருமானங்களை அதிகரிப்பதற்கு அல்லது குறைவடைவதற்குரிய அனைத்து பயன்தரு கருத்துரைகளுக்கு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் அவதானமாக இருக்க வேண்டிய போதிலும் 16 வருமான கணக்குகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முரண்பாடுகள் தொடர்பாக ஆழமாகப் பகுப்பாய்வு செய்து காரணத்தை தெரிவித்தல் | சுங்கத் திணைக்களத்தின் மூலம் மீளாய்வாண்டில் யூன் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தின் போது அடுத்து வரும் ஆண்டிற்காக வருமான மதிப்பீடானது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. ஆயினும், மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுடன் புதிய பாதீட்டுப் பிரேரணைகள் அமுல்ப்படுத்தப்பட்டதன் காரணமாக தொடக்க மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் இடம் பெற்றிருந்தன. ஆயினும், புதிய பாதீட்டு பிரேரணைகளுக்கு ஒத்ததாக திருத்திய பாதீடு அரசாங்க நிதிக்கொள்கைத் திணைக்களத்தின் மூலம் பின்னர் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் சுங்கத் திணைக்களத்தின் வருமானத் திலைப்பிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட |

வருமாணத்தை சேகரித்தல் மூன்றாந் தரப்பினர்களின் பொருளாதார செயற்பாடுகளின் அடிப்பயில் தங்கியிருப்பதனால் அதனை சுங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. அதாவது வியாபார சமூகத்தின் நடத்தைகள் உலக எண்ணை விலையில் மாற்றங்கள் சர்வதேச வர்த்தகம் சம்பந்தமாக ஏனைய நாடுகளிலிருந்து ஏற்படுகின்ற உதவிகளும் தடைகளும் ஆகிய பெரும்பாக பொருளியல் நடைமுறைகளின் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களை பகுப்பாய்வு செய்யும் போது 100 சதவீதம் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் வருமான மதிப்பீட்டினைத் தயாரிப்பதும் சிக்கலானதாகும்.

இச் சிக்கலினை முடியுமான அளவு குறைப்பதற்கு தற்பொழுது இலங்கை சுங்கத் திணைக்களம் சுங்க வருமானக் குழுவினை நியமித்துள்ளதுடன் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் அதன் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளன ர். அவ்வாறே அக்குழுவினூடாக

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வருமான மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு விசேடத்துவமான மாதிரியினைத் (model) தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதனை உள்ளடக்கி ஏனைய நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. இதன் மூலம் எதிர்காலத்தில் சிறப்பாக நடைமுறைச் சாத்தியமான வருமான மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கும் வருமான முரண்பாட்டிற்கு தாக்கமளிக்கும் காரணத்தை வெளிப்பமுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. |
| • (3) | நி.பி 565 | வைப்புக்களைப் பெறுதல் மற்றும் செலுத்துதல் சம்பந்தமாக கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டுக் கணக்கை பேணுவதன் மூலம் கணக்கீட்டு நடவடிக்கையை இலகுபடுத்துதல். | அதிகளவு எண்ணிக்கையான வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காணப்படுவதனால் கட்டுப்பாட்டுக் கணக்கைப் பேணுதல் மற்றும் வைப்பு பொழிப்பை தயாரித்தல் நடைமுறையில் சிக்கலானதாகும். |
| • (5) | நி.பி 565 | ஒவ்வொரு ஆண்டிற்காக பொது 71 படிவத்தின் பிரகாரம் தயாரித்து மாதாந்த வைப்பு பொழிப்புக் கூற்றினை அடுத்து வரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்காய்வு நடவடிக்கைக்காக | அதிக எண்ணிக்கையான வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காணப்படுவதனால் மாதாந்த வைப்பு பொழிப்புக்களைத் தயாரித்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உதவியளித்தல். | நடைமுறையில் சிக்கலானதாகும். |
| | • நி.பி 571 (i) | | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் உரிமை கோரப்படாத வைப்புக்கள் தொடர்பாக அரையாண்டுப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | 2016 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் அரசாங்க வருமாணத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் காணப்படுகின்ற அதிகளவான வைப்புக்களின் காரணமாக அரையாண்டு ரீதியாக அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட வைப்புக்களின் பட்டியலைத் தயாரித்தல் சிக்கலானதன் காரணமாக வருடாந்தம் அரசாங்கத்தின் வருமானத்திற்குச் செலவு வைக்க வேண்டிய பட்டியல் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| **(iv)** | **திருத்திய நிதிப் பிரமாணம்**<br>------------------------------------- | | | | |
| | • நிதி அமைச்சு செயலாளரின் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நி.பி 371(2) | 500,000 | குறித்த செயலுக்கான உப கட்டு நிதியானது ரூபா 100,000 எல்லையை மிகைக்கின்ற சந்தர்ப்பத்தின் போது அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் முறைப்படி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சுங்க பிரதான அலுவலகத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தல் சபைக்கு (Markfed) வழங்கப்பட்ட முற்பணத்திற்காக திறைசேரியின் அங்கீகாரம் | நிர்ணயிக்கப்பட்டவாறு திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் | உங்களின் அவதானிப்பின் பிரகாரம் 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவாக தெரிவித்துக்கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்படவில்லை. | | |
| • நிதி அமைச்சு செயலாளரின் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நி.பி 371 (2) (ஆ) | 394,024 | இலங்கை சுங்கத்தின் 09 உத்தியோகத்தர்களால் செயல் நிமித்த உப கட்டு நிதி பெற்றுக் கொண்டு கட்டு நிதியில் 32 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை கையில் எஞ்சியிருந்த பணம் 16 இலிருந்து 184 வரையான வேலை நாட்கள் கையில் வைத்திருக்கப்பட்டன. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் முற்பணத்தை தீர்த்து வைக்காத உத்தியோகத்தர்கள. முறைப்படியாக நடவடிக்கை எடுத்தல். | சில சந்தர்ப்பங்களில் ஏதாவது செயற்பாடுகளுக்காக முற்பணத்தை செலுத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக (உதாரணம் : விடுமுறை விடுதிகளை ஒதுக்கீடு செய்தல், உணவுக்காக கட்டளையிடல்) நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் முற்பணத்தை வழங்க வேண்டியிருத்தல். |
| • நிதி அமைச்சு செயலாளரின் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நி.பி 371 (5) | 2,378,000 | உப கட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு முடிவுறுத்தப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டு நிதியை கணக்குகள் பிரிவிற்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் செயல் நிமித்த கட்டு நிதி பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களால் 25 சந்தர்ப்பங்களின் போது உப கட்டு நிதிகள் உரிய காலத்தில் தீர்த்து வைக்கப்படாமை மற்றும் அத் தாமத காலம் 15 நாட்களிலிருந்து 203 நாட்கள் வரை காணப்பட்டன. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள் முற்பணங்களைத் தீர்த்து வைக்காத உத்தியோகத்தர்கள. சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களை தாமதமின்றி தீர்த்து வைக்குமாறு உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற இடமாற்ற நடைமுறைகளின் பிரகாரம் நிரந்தரமாக உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெறுவதனால் முற்பணங்களைத் தீர்த்து வைக்கும் போது தாமதங்கள் ஏற்படுகின்றன.<br><br>உங்களால் சுட்டிக்காட்டப்பட்டவாறு சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய சுங்கப் பணியாளர்களுக்குத் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| **(v)** | **அரசாங்க நிருவாக சுற்றறிக்கை** ----------------------------------- | | | | |
| | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை | | அரசாங்க நிறுவனங்களிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி வருகை மற்றும் வெளிச் செல்லைப் பதிவு செய்ய வேண்டிய போதிலும் இலங்கை சுங்கத்தில் எந்த உத்தியோகத்தரும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | அரசாங்கத்தின் பொதுவான அறிவுறுத்தல்கள் மற்றும் அரசாங்க கணக்குகள் குழுவின் பணிப்புரைகளைப் பின்பற்றுவது தொடர்பாக தீவிர கவனம் வெலுத்தப்படுதல் வேண்டும். | உங்களின் அவதானிப்புக்கள் தொடர்பாக பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட போதிலும் அதற்காக இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு முடியாதிருந்தது. |
| **(vi)** | **அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை** --------------------------------------- | | | | |
| | 2010 யூலை 12 ஆந் திகதிய 209/2010 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4.3.1 ஆம் பந்தி | 11,672,347,297 | வைப்புப் பேரேடுகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட இறுதி மீதிகள் 2018 சனவரி 01 ஆந் திகதி ஆரம்ப மீதியாக வைப்புப் பேரேட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்காததுடன் அத்திகதியில் காணப்பட்ட வைப்புக்களுக்கான துணைப் பதிவேடுகளும் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படியாக பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை உரிய முறைப்படி மேற்கொண்டு கணக்காய்விற்கு உதவியளித்தல். | வைப்புக் கணக்குகளில் நீண்ட காலமாக காணப்பட்டு வரும் மீதிகளில் வித்தியாசம் காணப்படுதல் மற்றும் அதிக அளவிலான கொடுக்கல் வாங்கல்கள் இக் கணக்கின் கீழ் நாளாந்தம் இடம்பெறுவதன் காரணமாக வைப்புக்களுக்காக துணைப் பதிவேடுகளைச் சமர்ப்பித்தல் சிக்கலாக உள்ளது. |
| (vii) | சுங்கத் திணைக்களத்தின் கட்டளை 375(3) | | அனைத்து பிரிவுகளில் மற்றும் உப அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் அலுவலக வளவிற்கு வெளியே செல்வது | பலவீனமான உள்ளகக் கட்டுப்பாட்டு பண்பாக உள்ளதுடன் | உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தி எதிர்காலத்தில் முறையான வெளிச் செல்லல் |

| | | |
|---|---|---|
| சம்பந்தமாக வெளிச்செல்லல் பதிவேடு பேணப்படுதல் மற்றும் ஒரு பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் அது பற்றி மேற்பார்வை செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமையைச் சரி செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுத்தல். | பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

நிலுவையான வருமானங்களை சேகரிப்பது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) **நிலுவை வரி வருமானம்** | | |
| (i) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவையான வரிப் பெறுமதியில் ரூபா 6,370 மில்லியன் அல்லது 30.36 சதவீதமானது நிலுவையான இறக்குமதி வரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அவற்றில் ரூபா 4,673 மில்லியன் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிலுவையாக இருந்த வரிப் பெறுமதியாகும். | | |
| (ii) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டு மொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 2,884 மில்லியன் அல்லது 13.75 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிலுவையானது துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிகளிலிருந்தானதுடன் அவற்றிலும் ரூபா 2,664 மில்லியன் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் | நிலுவை வரியானது சரியாக தாமதமின்றி அறவீடு செய்யப்பட்டு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |

நிலுவையாகவிருந்த வரிப் பெறுமதியாகும்.

(iii) 2011 ஆம் ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்ட பிராந்திய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வரியின் மூலம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42 மில்லியனான நிலுவை வரி வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் ரூபா 12 மில்லியன் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதாவது 28.52 சதவீதம் மாத்திரமாகும். அதற்கிணங்க 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவீடு செய்ய வேண்டியிருந்த ரூபா 30 மில்லியன் பெறுமதியானது 2008 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிக்குரிய நிலுவை பெறுமதியாகும்.

(iv) 2018 திசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வரி வருமான அறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 5,597 மில்லியனை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற பெற்றோலிய உற்பத்தி வருமானம் 2018 ஆம் ஆண்டு தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்டது. அது ஒட்டு மொத்த நிலுவை வரி வருமானத்தில் 26.68 சதவீதமாக இருந்ததுடன் அத்தியாவசிய சேவைகளுக்கான அரசாங்க நிறுவனத்தால் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருளுக்கான அறவீடுகள் தாமதித்ததன் அடிப்படையில் நிலுவையாகக் காணப்பட்டது.

(v) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,979 மில்லியனான ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 0.42 சதவீதம் அல்லது ரூபா 89 மில்லியனை பிரதிநிதித்துவப்படுத்துவது நிலுவையாகவுள்ள மதுபான உற்பத்தி வரி வருமானமாகும். இது

நிலுவை வரியானது சரியாக தாமதமின்றி அறவீடு செய்யப்பட்டு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது.

கணக்காய்வு அவதானிப்பு சரியானது

| | | | |
|---|---|---|---|
| | உரிய கம்பனியால் கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தவறியதன் காரணமாக 2001 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட நிலுவை மீதியாக இருந்தது. | | |
| (vi) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ஒட்டு மொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 1,323 மில்லியனை பிரதிநிதித்துவப்படுத்தும் மோட்டார் வாகன உற்பத்தி வரி வருமானத்தில் ரூபா 328 மில்லியன் அல்லது 24.78 சதவீதமானது 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வரி சரியாக காலதாமதமின்றி அறவீடு செய்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |
| (vii) | தண்டப் பணம் மற்றும் பறிமுதல் செய்தல் வருமான குறியீட்டின் கீழ் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 1,630 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 1,369 மில்லியன் 2008 ஆம் அண்டிற்கு முன்பிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.. | நிலுவை வரியை சரியாக கால தாமதமின்றி அறவீடு செய்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். | தண்டப் பணம் மற்றும் பறிமுதல் செய்தல் தொடர்பான நடவடிக்கையானது சுங்கத்திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட சுங்கப் புலனாய்வுகளின் இறுதித் தீர்ப்புக்களின் பிரகாரம் இடம்பெறுகின்றது. அவை தொடர்பாக அறவிடப்பட்டுள்ள பணம் புலனாய்வு நடவடிக்கைகள் மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படும் வரை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. விசாரணைகளின் பெறுபேறுகளின் பிரகாரம் மீண்டும் வெளித்தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதில்லையாயின் அரசாங்க வருமானத்திற்கு மற்றும் |

சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்படும். அவ்வாறு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதன் காரணமாக இது நிலுவை வருமான அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை.

**2.2 செலவு முகாமைத்துவம்**

-------------------------------------

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தல், நிதி ஏற்பாடுகளை மாற்றம் செய்தல், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ளலும் பயன்படுத்தலும், நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல், சேமிப்புக்கள் சம்பந்தமான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | **மீண்டுவரும் செலவுகள்**<br>-------------------------------------<br>மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 3,269 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் 34 சதவீதமான ரூபா 1,101 மில்லியன் செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. சேமிப்புக்கள் அறிவிக்கப்பட்ட 09 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாகக் காணப்பட்ட சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 16 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமான அடிப்படையில் மதிப்பீட்டினைத் தயாரித்து பாதீட்டு முரண்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) | **மூலதனச் செலவுகள்**<br>--------------------------------------------------------------------<br>2018 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 346 மில்லியனில் 68 சதவீதமான ரூபா 236 மில்லியன் செலவு செய்யப்படாது சேமிப்பாகக் காணப்பட்டது. சேமிப்புக்கள் அறிவிக்கப்பட்ட 08 செலவு விடயங்களின் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 38 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | இந்த முரண்களின் மூலம் தேசிய பாதீட்டிற்கு ஏற்படும் தாக்கம் உரிய தரப்பினர்களின் அவதானத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான 1102 ஆம் இலக்க (வெளிநாட்டு பயணச் செலவுகள்) மற்றும் 1203 ஆம் இலக்க (உணவும் சீருடைகளும்) செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 3.5 மில்லியன் மற்றும் ரூபா 14 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அளவு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் முறையே 90 சதவீதம் மற்றும் 36 சதவீதமாகும். அதற்கிணங்க வருடாந்த மதிப்பீட்டினைத் | - மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது செலவுகளுக்கு நிதி பெறும் வழிகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.<br>- ஆண்டின் போது நிறைவேற்றக் கூடிய செயற்பாடுகளுக்காக நடைமுறைச் சாத்திய மட்டத்தில் மதிப்பீட்டினைத் தயாரித்தல்.<br>- நடைமுறைச் சாத்தியமற்ற | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சுங்க உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக சுங்கத் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற ஏனைய நாடளாவிய சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்காகவும் வெளிநாட்டுப் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு மதிப்பீடு தயரிக்கப்படுகின்றது. ஆயினும், 2018 ஆம் ஆண்டில் |

| | | |
|---|---|---|
| தயாரிக்கும் போது செலவுகள் நிதிப்படுத்தும் வழிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது நிதி எற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருடாந்த மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலவு செய்வதற்கான வாய்ப்பு காணப்படுவதன் காரணமாக செலவு சம்பந்தமான நிதிக் கட்டுப்பாட்டினை மீறக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டின் மூலம் தேசிய பாதீட்டிற்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கம் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். | அவ்வாறான பயிற்சி சந்தர்ப்பங்களை குறைத்தல் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்படுவதற்கு தாக்கமளித்திருந்தது.<br><br>2018 நவம்பர் மாதத்திற்காக சுங்க உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்குவதற்காக துறைமுக அதிகார சபைக்கு செலுத்த வேண்டியிருந்த பணம் ரூபா 2.8 மில்லியனாகும். அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இன்வொயிசில் காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்து வவுச்சர்களை அனுப்புவதற்கு தாமதித்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் அச் செலவுகளுக்கு கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. இதற்கு மேலதிகமாக சுங்கத் திணைக்களத்தின் சீருடைகளுக்கு தகமையுள்ள பதவியணியினருக்கு தற்பொழுது காணப்படும் சீருடையை மாற்றம் செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவின் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு காலம் எடுத்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது சீருடை துணிகளை கொள்வனவு செய்வதற்கு முடியாமையும் நிதி ஏற்பாடு சேமிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தது. |

(ஈ) 2001 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக (கட்டிடங்களும் நிர்மாணங்களும்) ரூபா 120 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 82.56 சதவீதமான ரூபா 99 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிப்பாக அறிவிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பிற்கான காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு பெறுகை நடவடிக்கைகளை முடிவுறுத்த முடியாதிருந்தமை காட்டப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட நிதி ஏற்பாட்டில் (ரூபா 120 மில்லியன்) ரூபா 115 மில்லியனும் கட்டுநாயக்கா சுங்க

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வறையின் ஐந்தாவது மாடியை நிர்மாணிப்பதனை உள்ளிட்ட திருத்த வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந் நிர்மாணத்திற்காகத் தேவையான சட்ட அங்கீகாரம் 2019 மார்ச் 21 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தின் பிரதான கணனி முறைமையான ஆசி குடா தகவல் தொழில்நுட்ப முறைமையை பராமரித்தல், புனரமைத்தல், மேம்படுத்துதல், மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு மத்தியில் செலவு விடய இலக்கம் 1302 இன் கீழ் ரூபா 7 மில்லியனும் செலவு விடயம் இலக்கம் 2002 இன் கீழ் ரூபா 17 மில்லியனும் செலவு விடய இலக்கம் 2103 இன் கீழ் ரூபா 15 மில்லியனும் செலவு விடய இலக்கம் 2401 இன் கீழ் ரூபா 10 மில்லியனும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக முறையே 100 சதவீதம், 38.44 சதவீதம், 100 சதவீதம் மற்றும் 99.75 சதவீதமாகும். இச் சேமிப்பிற்காக எதிர்பார்க்கப்பட்டவாறு செலவுகள் இல்லாதிருந்தமை, எதிர்பார்க்கப்பட்டவாறு பெறுகை நடவடிக்கைகளை முடிவுறத்த முடியாதிருந்தமை என்பன காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க செலவுகளை மதிப்பீடு செய்யும் போது செயற்திட்ட தேவைப்பாடு, இயளலவு நோக்கெல்லை என்பவற்றை இனங்காணும் பலவீனத்தைப் போல பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்களுக்கு இணங்க நடடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக மதிப்பீட்டு ஒதுக்கீட்டில் அதிகளவு சேமிப்பதற்கு காரணமாக இருந்தது. என்பது அவதானிக்கப்பட்டது. | - மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது செலவுகளுக்கு நிதியளிக்கும் வழிகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.<br><br>- ஆண்டின் போது மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளுக்காக நடைமுறைச் சாத்தியமான மட்டத்தில் மதிப்பீட்டினைத் தயாரித்தல்.<br><br>- நடைமுறைச் சாத்தியமற்ற மதிப்பீட்டின் மூலம் தேசிய பாதீட்டிற்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கம் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்துதல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 1409 ஆம் இலக்க செலவு விடயத்திற்கான (ஏனையவை) வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபா 900 மில்லியனாகும். அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 840 மில்லியன் அல்லது 93 சதவீதம் கொள்கலன் ஸ்கேனர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது உரிய செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 83 மில்லியன் பணம் நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் ஏனைய 09 செலவு விடயங்களுக்கு மாற்றம் செய்தல் இடம் பெற்றிருந்தது. | - மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது செலவுகளுக்கு நிதியளிக்கும் வழிகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.<br><br>- ஆண்டின் போது நிறைவேற்றக் கூடிய செயற்பாடுகளுக்காக நடைமுறைச் சாத்தியமான மட்டத்தில் மதிப்பீட்டினைத் தயாரித்தல்.<br><br>- நடைமுறைச் சாத்தியமற்ற மதிப்பீட்டின் மூலம் தேசிய பாதீட்டிற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்துதல். | 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட துறைமுக வளவினுள் பொருத்துவதற்குத் திட்டமிடப்பட்ட கொள்கலன் ஸ்கேனர் இயந்திரம் பொருத்தும் செயற்திட்டமானது உச்ச நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கின் காரணமாக 2017 ஆம் ஆண்டு வரையும் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. 2018 ஆம் ஆண்டில் அச்செயற்திட்டத்தினை அமுல்படுத்துதல் என்ற எதிர்பார்ப்பில் மற்றும் கௌரவ நிதி அமைச்சரின் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தனால் இதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. உரிய செயற்திட்டத்திலிருந்து கட்டணத்தை அறவீடு செய்வதன் அடிப்படையில் அரசாங்கத்திற்கு வருமானமும் எதிர்பார்க்கப்படுவதனால் இந்த நிதி எற்பாடு அந்த வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டுப் பற்றாக்குறைக்கு தாக்கமில்லாத வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் செயற்பாடுகளுக்கான செலவுகளை மேற்கூறிய நிதி ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ள வேண்டி இடம் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. திணைக்களத்தின் ஏனைய நிருவாக நடவடிக்கைகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட செலவு மிகைத்ததன் காரணமாகவும் சுற்றறிக்கையின் மூலம் இணைந்த படிகளைச் செலுத்துதல் திருத்தப்பட்டதன் அடிப்படையில் எதிர்பார்க்காத வகையில் அதிகரித்ததன் காரணமாகவும் தேவையான மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதலானது மேற்கூறிய எஞ்சிய நிதி ஏற்பாட்டிலிருந்து வழங்குதல் இடம் |

பெற்றிருந்தது.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செலவுகளுக்கான தேசிய நிதி ஏற்பாடு ரூபா 3,615 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான செலவு ரூபா 2,277 மில்லியனாகும் அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுக்குமிடையேயான வித்தியாசம் ரூபா 1,337 மில்லியனாக இருந்ததுடன் அதனை சதவீதமாக எடுத்துக்கொள்கையில் 37 சதவீதமாகும்.

(ஏ) 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக வழிகாட்டிகளையும் ஆலோசனைகளையும் உள்ளடக்கி வழங்கப்பட்ட 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்காக காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் 2018 – 2020 மத்திய கால அனைத்து அரச நிதி கட்டமைப்பின் பிரதான மூலக் கூறாக மீண்டுவரும் செலவுகளை பகுத்தறிவுக்குள்ளாகுதல் மற்றும் முன்னுரிமைச் செலவுகளை முன்னுரிமைப்படுத்துவதனைப் போல அரசாங்க வருமானங்களை சேகரிப்பதனை மேம்படுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அடுத்து வரும் ஆண்டுகளின் போது ஏற்படக்கூடிய அரசாங்க நிதி முகாமைத்துவ சவால்களுக்கு முகங்கொடுத்தல் மற்றும் உள்நாட்டு சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் முதலிய குறிக்கோள்கள் வலியுறுத்தப்பட்டிருந்தது.

எனினும், 2018 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத்தின் ஆளணி வேதனத்தை தவிர்த்து மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 1,471 மில்லியன்

- மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது கடந்த சில ஆண்டுகளில் செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை ஒப்பீடு செய்து எதிர்வரும் ஆண்டுகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை முன்னறிவதன் மூலம் செலவு விடயங்களுக்காக தேவையற்ற வகையில் நிதி ஏற்பாடுகள் வழங்குவதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறான நடைமுறைச் சாத்தியமற்ற மதிப்பீட்டு முரண்களின் காரணமாக தேசிய பாதீட்டிற்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள் உத்தியோகத்தர்களின் தீவிர கவனத்திற்கு கொண்டு வரப்படுதல் வேண்டும்.

கணக்காய்வு அவதானிப்பு சரியானது எதிர்கால மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது உங்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், திட்டமிடப்பட்டவாறு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள விடுவிக்கும் போது திறைசேரி கட்டுநிதியைப் பெற்றுக்கொள்வது சிக்கலுடையதாக உள்ளதனால் நிதி ஏற்பாடுகள் சேமிப்பாக இருப்பதற்காகவும் அது காரணமாக இருந்தது. என்பதனை தயவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் ரூபா 346 மில்லியனாக ரூபா 1,817 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதியளவில் மீண்டுவரும் (ஆளணி வேதனத்தை தவிர்த்து) மற்றும் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே ரூபா 769 மில்லியன் அல்லது 52 சதவீதம் மற்றும் ரூபா 236 மில்லியன் அல்லது 68 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.
அதற்கிணங்க இலங்கை சுங்கத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்கு நிதி ஏற்பாடுகளை செலவு செய்யும் போதும் மேற்கூறிய சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்.**

பொறுப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | **நிதி ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புக்களை ஏற்படுத்துதல்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இலக்கம் 94(1), 2017 திசெம்பர் 22 ஆந் திகதிய 263 / 2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 03 (ஊ) ஆம் பந்தி 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 266/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4:11 ஆம் பந்தி, 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி ஆகிய நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தால் 07 செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 16.73 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | காணப்படுகின்ற சட்ட விதிகள் தொடர்பாக உத்தியோகத்தரால் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படாதிருத்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |
| **(ஆ)** | **பொறுப்புக்கள் சரியாக வெளிப்படுத்தப்படாமை.** | | |
| | (i) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனைத்து பொறுப்புக்களும் குறிப்பு (iii) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 26.5 மில்லியன் கூட்டு மொத்தமான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களை சரியாகக் கணித்து உரிய படிவங்களில் உள்ளடக்குதல் வேண்டும். | சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளினூடாக அதிக அளவிலான பொறுப்புக்களும் கடப்பாடுகளும் ஏற்படுவதனால் அந்த விபரத்தினை சரியாக நிதிப்பிரிவிற்கு வழங்க முடியாதிருந்ததனால் இக் குறைபாடு ஏற்பாட்டுள்ளதுடன் அந் நிலைமையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (ii) அவ்வாறே 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 266/2018 ஆம் | அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்குத் | 266/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் |

| | | |
|---|---|---|
| இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4:11 ஆம் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செம்மையாக்கப்பட்ட பொறுப்புக்களும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையும் பின்னிணைப்பு 01 ஆக முதலாவது குறைநிரப்பு கணக்கு திணைக்களத்தின் மூலம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 26.5 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் அரசாங்க கணக்குகள் திணைக்கத்திற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவைப்படுகின்ற தரவுகளை சரியாக உரிய காலத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். | சுற்றறிக்கையின் 4.11 ஆம் ஒழுங்க விதிகளின் பிரகாரம் செம்மையாக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை முதலாவது குறைநிரப்பு கணக்கு பொழிப்பின் மூலம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் WWW.newcigas.gov.lk இணைய தளத்திற்கு Upload செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறைநிரப்பு கணக்கு பொழிப்பைச் சமர்ப்பித்ததன் பின்னர் இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

மீளாய்வாண்டின் போது 16 வருமானக் குறியீடுகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 831,290,000,000 ஆக இருந்தும் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 86.16 சதவீதமாகிய ரூபா 716,277,377,520 தொகையாகும். எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்த வருமான குறியீடு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வருமான பெறுவனவுகள் | | |
| I. | மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தால் சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த தேறிய வருமானம் ரூபா 716,277 மில்லியனாக இருந்ததுடன் அதில் இறக்குமதி வரி வருமான குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 97,071 மில்லியனாகம். கடந்த ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 136,501 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 39,429 மில்லியளால் குறைவடைந்திருந்தது. | | |
| II | மீளாய்வாண்டின் போது இறக்குமதி செஸ்வரி வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 50,790 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது இவ் வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 56,574 மில்லியனாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம், ரூபா 5,784 மில்லியனால் அல்லது 10.22 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | | |
| III | மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்க ஏற்றுமதி செஸ் வரி வருமாண குறியீட்டின் கீழ் ரூபா 2,591 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது இந்த வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 2,980 மில்லியனாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 388 மில்லியனால் அல்லது 13.03 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்காக உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |
| IV | இலங்கை சுங்கத்தினால் சேகரிக்கப்பட்ட மதுபான உற்பத்தி வரி 2002 மார்ச் 22 ஆந் திகதிய 1228/14 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2002 மார்ச் 22 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் 2016 நவம்பர் 10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மதுபான உற்பத்தி வரி விதிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டு தொடர்பாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 53 மில்லியனாக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 416 மில்லியனால் அல்லது 88.65 சதவீதத்தால் குறைவாகும். | | |
| V | மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தின் மொத்த தேறிய வருமானமாகிய ரூபா 716,277 மில்லியனில் ரூபா 66,318 மில்லியன் அல்லது 9.25 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பெற்றோலிய உற்பத்தி வரி முன்னைய ஆண்டினை விட ரூபா 7,664 மில்லியனால் அல்லது 10.36 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. என்பது அவதானிக்கப்பட்டது. | நிலுவை வரி வருமானத்தை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை சுங்கம் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையை 2019 யூன் 15 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காகச் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கை சுங்கத்தின் தடுத்து வைத்தல் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு சீருடைப் பொருட்களை வழங்குவதற்காக அதன் சேவைகளை வழங்கும் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14 மில்லியன் தொகையான பெறுகைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டிக்கு முரணாக தேசிய போட்டி விலைகளைக் கோரும் முறைமைக்குப் பதிலாக சந்தை விலை கோரும் முறைமை (Shopping Method) பின்பற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 8:9:1 (ஆ) பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் | - அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளை உச்ச அளவில் பின்பற்றி சிறப்பாகவும் செயற்திறனாகவும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.<br>- ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை | பெறுகை நடைமுறைகள் தொடர்பான போதியளவு பயிற்சிகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாததன் காரணமாக இவ்வாறான குறைபாடு இடம் பெற்றுள்ளதுடன் பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | இப்பெறுகைக்காக முறையான உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்காத தரப்பினர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br><br>- அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன் வழங்க கூடியவாறு பெறுகை நடவடிக்கைகளை செயற்படுத்துதல் | ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கேள்விதாரர்களிடமிருந்து விலை மனுக்களைக் கோரி அனுப்பிய கடிதம் விலாசம், திகதி இல்லாத ஒன்றாகும். தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் கேள்வி ஆவணங்களைப் பூரணப்படுத்தாமை, உரிய கேள்வி ஆவணங்களின் மூலம் இல்லாது கேள்விதாரருக்கு தனிப்பட்டதான கடிதத்தின் மூலம் விலை மனுக்களைச் சமர்ப்பித்திருந்தமை, பெறுகை கால எல்லைகளுக்கிடையில் சேவைகளை வழங்கும் பிரிவினால் முறைப்படியான கட்டளையின்றி அவ்வப்போது பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் விலைகளை விசாரித்து நிர்ணயிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை உள்ளடக்கிய கடிதம் ஒப்படைக்கப்பட்டமைக்கு எதுவித சான்றும் சமர்ப்பித்திருக்காமை கேள்வி ஆவணங்களைப் பொறுப்பேற்கும் போது பதிவு செய்யப்பட்ட கடிதத்தின் மூலம் அல்லது பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியின் மூலம் இடம் பெற்றிருக்காமை. முதலிய குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக இப் பெறுகையானது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6:3:1 ஆம் வழிகாட்டி மற்றும் 695, 695(2), 695(3) இன் பிரகாரம் இடம் பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | கணக்காய்வுத் திகதியான 2018 மே 15 ஆந் திகதியில் தடுத்து வைத்தல் பிரிவின் சீருடைத் தேவைப்பாடு 713 உத்தியோகத்தர்களாக இருந்தும் 2017/18 ஆம் ஆண்டிற்காக | | |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து சுங்க உத்தியோகத்தர்களையும் அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக 59,523 சீருடை உருப்படிகளுக்காக ரூபா 14 மில்லியன் செலவு செய்ய வேண்டியிருந்தது. அவற்றில் 70 சதவீதம் அல்லது ரூபா 9 மில்லியன் பெறுமதியான 41,899 துணைப் பொருட்களும் தடுத்து வைத்தல் பிரிவின் தேவைப்பாட்டினை மிகைத்த கொள்வனவு என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | கொள்வனவு செய்ய வேண்டிய அளவினை நிர்ணயித்தல் தடுத்து வைத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும் அது சேவைகள் மற்றும் வழங்கல்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே தடுத்து வைத்தல் பிரிவிற்கு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பிழையான தகவல்களை வழங்கி ''அனைத்து சுங்க உத்தியோகத்தர்களுக்கும் அடுத்துவரும் 03 ஆண்டுகளுக்காக'' இக் கொள்வனவு இடம்பெற்றிருந்தது. | | |
| (உ) | வழங்குனர்களைத் தெரிவு செய்ததன் பின்னரும் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த அலகுகளின் எண்ணிக்கை 20 சதவீதத்திலிருந்து 400 சதவீதம் வரை வழமைக்கு மாற்றமாக அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகைக்குழு அங்கீகரித்திருந்த அளவையும் மிகைத்து ரூபா 2.3 மில்லியன் பெறுமதியான சீருடைத் துணைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், 2018 மே 30 ஆந் திகதி வரை மேற்கூறிய பெறுகைப் பெறுமதியில் 58 சதவீதம் அல்லது ரூபா 8 மில்லியன் பெறுமதியான 41,303 | - அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளை உச்ச அளவில் பின்பற்றி சிறப்பாகவும் செயற்திறனாகவும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.<br>- ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத தரப்பினர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br>- அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்களை வழங்கக் கூடிய வகையில் பெறுகை நடவடிக்கைகளை | பெறுகை நடைமுறைகள் தொடர்பான போதியளவு பயிற்சிகள் உத்தியோகத்தர்களுக்கு இல்லாததன் காரணமாக இவ்வாறான குறைபாடு இடம் பெற்றுள்ளதுடன் பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| துணைப் பொருட்கள் வழங்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளல். | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான கொம்பனி வீதியிலுள்ள மோகன் வீதியில் அமைந்துள்ள அரசாங்கத்தின் 18 உத்தியோகபூர்வ இல்லங்களை உள்ளடக்கி காணப்பட்ட வீட்டுத் தொகுதியில் தற்பொழுது 08 வீடுகள் மாத்திரம் எஞ்சியுள்ளது எனவும் ஏனைய வீடுகள் அழிவடைந்துள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான இக் காணியில் வெளித்தரப்பினர்களால் அத்துமீறி 02 வீடுகளை நிர்மாணித்து நீர் மற்றும் மின்சார வசதிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த அத்து மீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது இவ் வீட்டுத் தொகுதியில் 02 வீடுகள் ரூபா 607,319 செலவு செய்து புனரமைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் முறையே ரூபா 411,000 மற்றும் ரூபா 60,000 செலவு செய்து 06 கட்டில்களும் 12 மெத்தைகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை (2018 மே) இந்த 02 வீடுகள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. | அரசாங்க ஆதனங்களின் முறைகேடான பயன்பாட்டினைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அரசாங்க விளைவிளைதிறனான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொம்பனி வீதி மோகன் வீதியில் அமைந்துள்ள 40/11 ஆம் இலக்க வீடுகளை 12 உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இடமாற்றத்தின் காரணமாக அவ்வீடுகள் தேவையற்றது என பின்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது இவ் வீடுகளை சுங்க பரிசோதகர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>அழிவடைந்த ஆதனங்களை மறுசீரமைப்புச் செய்து சுங்க உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிறுவனம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுகின்றது.<br><br>மோகன் வீதியில் சுங்கத்திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் இருக்கின்ற அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றித் தருமாறு 2017 சனவரி 16 ஆந் திகதி CIB மற்றும் 320/138 ஆம் இலக்கத்தின் கீழ் கொம்பனி வீதி பொலிசுக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக கொழும்பு, பிரதேச செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எனது LOG/S/04-2016 ஆம் இலக்க 2017 யூன் 15 ஆந் திகதிய கடிதத்தில் பிரதி பொலிஸ் தலைமை அதிபதி (மேல் மாகாணம் - தெற்கு) யிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | இது சம்பந்தமாக கொழும்பு பிரதேச செயலாளரால் உரிய கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கை தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க தேவையான மேலதிக நடவடிக்கைகள் தற்பொழுது இடம் பெற்று வருகின்றது. |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் நிறைவேற்றப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஆயுட் காலத்தை மிகைத்த பழைய வாகனங்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு இறக்குமதி செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு உரிய உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாது 11 சந்தர்ப்பங்களின் போது சுங்கத்தினால் வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. | காணப்படுகின்ற ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் பற்றி அறிந்து தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ii) | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரினால் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தும் உரிய முறைப்படி உத்தரவுப் பத்திர நிபந்தனைகளின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்பதனை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வரவு அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னர் பொருட்களை சுங்கத்திலிருந்து விடுவிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு வரவு அறிவித்தல் வழங்கப்படாது 04 சந்தர்ப்பங்களின் போது வாகனங்கள் சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தன. | நிலைமையை முறைமைப்படுத்துவது மற்றும் முறையற்ற வகையில் செயற்பட்டுள்ள தரப்பினர் தொடர்பாக முறையாக விசாரித்து தேவையான நடவடிக்கை எடுத்தல். | |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஒரு இறக்குமதியாளருக்கு 02 ட்ரக் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட 1M-2-150-2018-00397-0001 ஆம் இலக்க உத்தரவுப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட வீதி நிர்மாணங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற ட்ரக் வாகனத்திற்காக சுங்க இணைந்த வகைப்படுத்தல் இலக்கத்தில் மாற்றம் செய்து விசேட செயற்பாட்டு வாகன தொகுதியின் (8705-90-94) கீழ் விடுவிக்கப்பட்டதன் காரணமாக இழக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 1,315,381 என்பது அவதானிக்கப்பட்டது. | வாகன வரியை அறவிடும் கொள்கையை சரியாக அமுல்ப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாததன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல். | பதில் வழங்கப்படவில்லை. |
| (iv) | FKH17F2 – 720019 ஆம் செசி இலக்க Mitsubishi தீயனைக்கும் வாகனம் நன்கொடையாகக் கிடைத்திருந்ததுடன் இது 1988 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட வாகனமாக இருந்தனால் இறக்குமதி உத்தரவுப் பத்திரத்துடன் இறக்குமதி செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாததன் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது தடை செய்யப்பட வேண்டியிருந்த இந்த வாகனத்தை 03 ஆண்டுகளின் பின்னர் பறிமுதல் செய்வதற்காக கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | பழைய வாகனங்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டியிருத்தல் மற்றும் அவ்வாறு செய்யாததன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டத்தினை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல். | KF417FZ – 720019 ஆம் இலக்க Mitsubishi தீயனைக்கும் வாகனம் சம்பந்தமான சிக்கல் இலங்கை துறைமுக அதிகார சபையில் உருவானதல்ல. இந்த வாகனம் இலங்கை இராணுவத்திற்கு நன்கொடையாகக் கிடைத்திருந்ததுடன் அந்த வாகனம் 1988 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட பழைய வாகனமாக இருந்ததனால் ஓடும் நிலை மற்றும் செயற்படும் நிலை தொடர்பாக திருப்தி கொள்ள முடியாதிருந்தமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தால் விடுவிப்பதற்காக இறக்குமதி உத்தரவுப் பத்திரம் வழங்கப்படவில்லை. இறக்குமதி செய்யும் வேளையில் இந்த வாகனத்தின் பெற்றரி செயற்பாடு பலவீனமடைந்திருந்ததுடன் இதனை சுங்கம் |

| | | |
|---|---|---|
| | | பொறுப்பேற்று கொழும்பு மட்டக்குளி வாகனப் பிரிவிற்கு எடுத்துவருதல் நடைமுறையில் சிக்கலான செயற்பாடு என்பது புரிந்து கொள்ளப்பட்டது. அவ்வாறே ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒரு வாகனத்தை பொறுப்பேற்று கொழும்புக்கு எடுத்துவருவதற்கு மேலதிக ஒரு வாகனம், மேலதிக சாரதி, உதவி உத்தியோகத்தர்கள் தேவையான உபகரணம், கருவிகள் என்பன ஆயத்தப்படுத்த வேண்டியுள்ளதனால் வெவ்வேறாக மூன்று சந்தர்ப்பங்களின் போது வேறு வேறு வாகனங்களை எடுத்துவருவதனை விட மூன்று வாகனங்களையும் ஒரே தடவையில் எடுத்து வரும் போது கிரயம் குறைவடைவதனால் வாகனங்களை ஒரே தடவையில் எடுத்துவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. KF417FZ – 720019 ஆம் செசி இலக்க Mitsubishi தீயனைக்கும் வாகனம் தாமதமின்றி சுங்கத்தின் பொறுப்பிற்கு எடுத்து அது சம்பந்தமாக சுங்க விசாரணையை (Custams Inquiry) நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

### 3.6 மோசடித்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | விவசாயத் திணைக்களத்தின் பயிர் நோய் தொற்றுத் தடை காப்பு சேவையின் அங்கீகாரமின்றி | சுங்க சட்டம் மற்றும் அதற்குரிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி | இது சம்பந்தமாக தொடக்க புலனாய்வும் சுங்கப் புலனாய்வும் |

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி செய்த ரூபா 2,148,757 மி.ரெ.கெ பெறுமதியான 34,640 கிலோ கிராம் இஞ்சிகள் அடங்கிய கொள்கலன்களை இறக்குமதி செய்யப்பட்ட மூன்று இறக்குமதியாளர்கள் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்ட சுங்க புலனாய்வுகள் எதுவித சட்டரீதியான நடைமுறைகளும் இன்றி முடிவுறுத்தப்பட்டன. என்பது அவதானிக்கப்பட்டது. உரிய இறக்குமதியாளர்களால் இறக்குமதி அங்கீகாரத்திற்குரிய புலனாய்வு உத்தியோகத்தர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவைகளாக இருந்த போதிலும் அந்த ஆவணங்களின் உண்மைத்தன்மை தொடர்பாக பரீட்சிப்பதற்கு சுங்க உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், மற்றும் ஏனைய சட்ட ஒழுங்கு விதிகள் பற்றி ஆழமாக ஆய்வு செய்து அரசாங்கத்தின் வரிக் கொள்கையை அமுல்ப்படுத்த வேண்டியிருந்தமை மற்றும் ஆவணங்களின் சரியான தன்மையை உறதிப்படுத்தாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறைப்படி தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நட்டத்தை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல். | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான 04 வாகனங்கள் சம்பந்தமாக இலங்கை சுங்கத்தின் தடுத்து வைத்தல் பிரிவு சுங்க புலனாய்வினை ஆரம்பித்திருந்தும் இறக்குமதியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போலியான ஆவணங்களின் அடிப்படையில் அவ்வாகனங்களை மீண்டும் இறக்குமதியாளருக்கு விடுவிப்பதற்கு சுங்க உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தாததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை முறைப்படியாக தேடிப்பார்த்து பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் போலி ஆவணங்களை சமர்ப்பித்த தரப்பினர் தொடர்பாக நாட்டில் காணப்படும் சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | |
| (iii) | பொருள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகளின் போது ஆவணங்களைப் பரீட்சித்தல் மற்றும் ஆவணங்களின் பௌதீக பொருட்கள் தொடர்பாக இலங்கை சங்கத்தில் போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை அமுல்படுத்தாமையின் காரணமாக விடுவித்தல் பிரதிநிதியாகச் செயற்படுகின்ற ஏற்றுமதி இறக்கமதி செயற்பாட்டு இலிகிதர்களுக்குச் (Wharf Clerk) களுக்கும் சுங்க உத்தியோகத்தர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தக் | - இறக்குமதியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான சுங்கவரி மோசடிகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்தி அரசாங்க வருமானத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.<br>- மோசடிகளுக்கு ஆதரவு அளித்துள்ள நபர்கள் | இது சம்பந்தமாக தொடக்க புலனாய்வும் சுங்கப் புலனாய்வும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடிய ஆபத்து அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக பொருள் பற்றாக்குறையினை மதிப்பீடு செய்தல், இறக்குமதி பொருள் நிர்ணயிக்கப்பட்டவாறு வெளியிடப்படாமை முதலிய முறைமையீனங்களினூடாக அரசாங்கத்தின் வரி வருமானம் இழக்கப்படுவதனைப் போல சட்டவிரோத மற்றும் தடைசெய்யப்பட்ட பொருள் இறக்குமதிகள் வெளிப்படுத்தப்படாமையின் ஆபத்து காணப்படுகின்றது என்பது கணக்காய்வு ஐயவினா மற்றும் அறிக்கைகளின் மூலம் அடிக்கடி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த நிலைமையை சரிசெய்வதற்கு மற்றும் புதிய நடைமுறையினை அறிமுகப்படுத்துவதற்குமாக போதியளவு கவனம் செலுத்துவதற்கு இலங்கை சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதுவும் அவதானிக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் போது இது சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வின் போது ஒரு இறக்குமதியாளரால் 6 சந்தர்ப்பங்களின் போது ரூபா 39,335,091 பெறுமதியான வாசனைத் திரவியங்கள் அடங்கிய 06 கொள்கலன்கள் மேற்கத்திய மருந்து வகைகள் என வெளிப்படுத்தி விடுவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு ரூபா 40,761,600 நட்டம் ஏற்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை சுங்கத்தின் ஆவணங்களையும் பொருட்களையும் பௌதீகரீதியாக பரீட்சித்த சுங்க உத்தியோகத்தர்களின் சம்பந்தமின்றி இவ்வாறான முறைகேடுகள் இடம்பெற முடியுமா என்பது கணக்காய்வில் பிரச்சினைக்குரிய விடயமாகும். | - | தொடர்பாக ஆழமாக விசாரித்துப் பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br><br>தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல். | |
| (iv) | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து மூன்று உத்தியோகத்தர்களுக்காக | - | முறைகேடுகள் இடம் பெற்றிருந்தால் அதற்காக காணப்படும் ஒழுங்கு விதிகளின் | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக |

| | | |
|---|---|---|
| வெளிநாட்டுப் பயிற்சிகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,125,496 செலவு செய்யப்பட்டிருந்தும் அவர்கள் அந்த வெளிநாட்டு செயலமர்வு நடைபெற்ற காலத்தில் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு மேலதிக நேர வேலைப்பணமாக ரூபா 8.333 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>- ஊழியர் நிருவாகம் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டை முறைமைப்படுத்துதல்.<br><br>- போலியான தகவல்களை சமர்ப்பித்ததன் மூலம் சட்டரீதியற்ற வகையில் அரசாங்க பணத்தை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | (கடமை) பங்குபற்றியுள்ள உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற காலப்பகுதில் மேலதிக நேர வேலையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதற்கு உரிய கையெழுத்துப் பதிவேடு சம்பந்தப்பட்ட பணிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக உரிய பணிப்பாளர்களிடமிருந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறே வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய உத்தியோகத்தரிடமிருந்து அக்காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட்டுள்ள மேலதிக நேர வேலைப் படிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சுங்கப் புலனாய்வு தொடர்பாக சுங்கத்தின் பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்பட்ட வாகனங்களையும் கொல்கலன்களையும் அதேபோல பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களையும் கொள்கலன்களையும் நிறுத்தி வைப்பதற்காக ரூபா 1 மில்லியன் மாதாந்த வாடகை அடிப்படையில் மட்டக்குளி பிரதேசத்தில் அமைந்துள்ள களஞ்சியத்துடனான இடம் (Salt Yard) தனியார் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதிக்காக ரூபா 29.6 | - வாகனங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பொறுப்பான தரப்பினர இனங்காணப்படுதல் வேண்டும்.<br><br>- புலனாய்வு நடவடிக்கைகளை விரைவுபடுத்தி வாகனங்களை தேவையற்ற வகையில் நிறுத்தி வைப்பதனால் ஏற்படக்கூடிய நட்டங்களைக் குறைத்தல்.<br><br>- சட்ட நடவடிக்கைகள் விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும்.<br>- | அடுத்து வரும் 03 மாதங்களுக்குள் இவ் வாகனங்களை விற்றல் அல்லது கைப்பொறுப்பு நீக்கம் செய்தல் இடம்பெறும் |

| | | |
|---|---|---|
| மில்லியன் கூட்டுமொத்தப் பணம் மாதாந்த வாடகையாக திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. இப்பிரிவில் 1 ஆண்டிலிருந்து 21 ஆண்டுகள் வரையான காலம் சுங்கத்தின் பொறுப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பல்வேறு வடிவங்களிலான 146 வாகனங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் பல வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத வகையில் துருப்பிடித்துக் காணப்பட்டதுடன் அவ்வாகனங்களை விற்றுத் தீர்த்து ஏதாவது வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமையும் நிச்சயமற்று இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. இவ்வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடைமுறைகளை எடுப்பதற்கு கணக்காய்வு பரிசோதனை மேற்கொண்ட திகதி வரை இலங்கை சுங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தின் பணத்திலிருந்து மேற்கொண்ட கொடுப்பனவுகளுக்கு போதியளவான<br><br>பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். | |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுநாயக்கா, பண்டாரநாயக்காக சர்வதேச விமான நிலையத்தில் வெளிச்செல்லும் கரும பீடத்தினூடாக 2015 யூன் 28 ஆந் திகதி இலங்கைப் பணம் ரூபா 16.8 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தை சட்ட விரோதமாக கொண்டு வருவதற்கு முயற்சித்த ஒரு தனிநபர் சம்பந்தமாக இலங்கை சுங்க மத்திய புலனாய்வு பிரிவினால் விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்தது. விசாரனையில் இறுதியில் உரிய தரப்பினருக்கு விதிக்கப்பட்ட | - சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதனை விசாரணைகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br><br>- இவ்வாறான சட்டத்திற்கு முரணான செயற்பாட்டை தவிர்த்துக்கொள்வதற்கு உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3 மில்லியன் தண்டப் பணத்தின் பின்னர் ரூபா 1.5 மில்லியன் வரை குறைப்பதற்கு அப்போதிருந்த சுங்கப் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இந்த இலகுபடுத்துதல் சுங்க கட்டளைச் சட்டத்திற்கு முரணானது என 2016 மார்ச் 02 ஆந் திகதிய PUR/A/CUS/2015/09 ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினாவினால் சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறே அத் தீர்மானத்தை சவாலாக எடுத்துக்கொண்டு பல தரப்பினர் மேன்முறையீட்டு நீதி மன்றத்திற்கு குற்றப் பத்திரிகையினை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தனர். அக்குற்றப் பத்திரிகைகளின் விசாரணைகளின் இறுதியின் போதும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் செய்யப்பட்ட இலகுப்படுத்துதல் சுங்க கட்டளைச் சட்டத்திற்கு முரணானது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின் காரணமாக இழக்கப்பட்டுள்ள ரூபா 1.5 மில்லியன் பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பாம் ஒயில் இருப்பாக இறக்குமதி செய்யப்படுகின்ற சந்தையின் பிரதான 02 நிறுவனங்களால் 2013 – 2016 காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பாம் ஒலேன் (palm Olein) எனும் பெயருள்ள எண்ணை வகை சரியான பொருள் ஒருங்கிணைப்பு வகைப்படுத்தலின் கீழ் விடுவிக்கப்படாததன் காரணமாக ரூபா 6.130 மில்லியனுக்கு அண்மித்த வரிப்பணம் இழக்கப்பட்டிருந்தது. என்பது அவதானிக்கப்பட்டது. இந்த இறக்குமதிகள் சம்பந்தமாக | - பொருள் வகைப்படுத்தல் பிரிவு அல்லது NC குழுவிற்கு கிடைத்த ஐய வினாக்களுக்காக குறித்த காலத்திற்குள் தீர்வுகள் வழங்குதல்.<br>- இலங்கை சுங்கத்தின் ஒட்டுமொத்த பதவியணியினர்கள் ஒத்திசைவாக அரசாங்க வருமானத்தை பாதுகாக்கும் குறிக்கோளுடன் நடவடிக்கை எடுக்கப்பட | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை சுங்கத்தின் புலனாய்வுப் பிரிவினால் சுங்கப் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இலங்கை சுங்கத்தின் பொருள் ஒருங்கிணைப்பு வகைப்படுத்தல் பிரிவு மற்றும் NC குழு உத்தியோகத்தர்களால் இறக்குமதியாளர்கள் சரியானவர்கள் என்ற அடிப்படையில் செய்யப்பட்டிருந்ததன் காரணமாக சுங்க புலனாய்வை முடிவுறுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. உலக சுங்க அமைப்பு உறுதிப்படுத்தலின் பிரகாரமும் இந்த இறக்குமதிகளின் மூலம் அரசாங்கத்தின் வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டிருந்தும் அப் பணத்தை அறவீடு செய்வதற்காக இலங்கை சுங்கம் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.<br><br>- சுங்கப் புலனாய்வுகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட சுங்கத் தவறுகளுக்காக ஆதரவு வழங்கியுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் இயலுமையை விசாரித்தறிதல். | |
| (இ) | 1999 இன் 33 ஆம் இலக்க பயிர் பாதுகாப்பு அதிகாரச் சட்டம் மற்றும் 1981 நவம்பர் 02 ஆந் திகதிய 165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தேசிய பயிர் தொற்று நோய்த் தடைகாப்புச் சேவையின் இறக்குமதி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 52 மில்லியன் மி.ர.கெ பெறுமதியான 821,650 கிலோ கிராம் இஞ்சியை விடுவிப்பதற்கு சுங்க உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.<br><br>இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற பயிர்கள் மற்றும் பயிர் சார்ந்த பகுதிகள் சம்பந்தமாக இறக்குமதி அங்கீகாரம், ஆவணங்களைப் பரீட்சித்தல், பௌதீக பரிசீலனை ஆகிய செயற்பாடுகள் சம்பந்தமாக இலங்கை சுங்கத்திற்கும் பயிர் தொற்று நோய்த் தடைக்காப்புச் சேவைக்குமிடையே கணனிமயப்படுத்தப்பட்ட தொடர்பு | - இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற பயிர் மற்றும் பயிர் சார்ந்த பகுதிகள் சம்பந்தமான இறக்குமதி அங்கீகாரம் ஆவணங்களைப் பரீட்சித்தல், பௌதீகப் பரிசோதனை ஆகிய செயற்பாடுகள் சம்பந்தமாக இலங்கை சுங்கத்திற்கும் பயிர் தொற்று நோய்த்தடுப்புச் சேவைக்குமிடையே கணனிமயப்படுத்தப்பட்ட தொடர்புகள் பேணப்படுதல் வேண்டும்.<br><br>- காணப்படுகின்ற சட்ட விதிகள் சம்பந்தமாக சுங்க உத்தியோகத்தர்களுக்கு போதியளவு அறிவினை வழங்குதல் வேண்டும்.<br><br>- இறக்குமதி செய்யப்பட்ட அளவினை ஒப்பீடு செய்வதற்கான நடைமுறைகளைத் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாமை காணப்படுகின்ற சட்ட விதிகள் சம்பந்தமாக உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்காமை, இறக்குமதி செய்யப்பட்ட அளவினை ஒப்பீடு செய்வதற்கான நடைமுறைகள் இல்லாமை, வேலை நடைமுறைகளின் பிரகாரம் கடமைகள் நிறைவேற்றப்படாமை என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்களின் காரணமாக இவ்வாறான ஒழுங்கீனங்கள் இடம் பெற்றுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. | தயாரித்தல், வேலை நடைமுறையின் பிரகாரம் சுங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நிறைவேற்றாமை என்பவைகளை உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்களின் காரணமாக இடம் பெறுகின்ற அவ்வாறான ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக முறைப்படியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஈ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவு, 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானி, 2002 திசெம்பர் 31 ஆந் திகதிய 2018 (F) இலக்க உள்ளக சுற்றறிக்கை முதலியவற்றின் பிரகாரம் கொழும்பு துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்களுக்காக சுங்க உத்தியோகத்தர்கள் நிறைவேற்றுகின்ற சுங்க கடமைகளுக்கான மேலதிக நேர வேலைக் கட்டணங்களானது அக்கப்பல்களிலுள்ள கொள்கலன்களின் அளவுகளின் அடிப்படையில் கணக்கிட்டு சுங்க மேலதிக நேர வேலை மற்றும் கப்பல்களுக்கு பரிசோதனை கட்டணம் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்ட போதிலும் அதற்கான தாக்கம் ஏற்படுத்துகின்ற சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் வைத்திருக்க வேண்டிய அறிக்கை மற்றும் நடைமுறைகள் சம்பந்தமான பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்தின் 103 ஆம் பிரிவு மற்றும் 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2002 திசெம்பர் 31 ஆந் திகதிய 218(F) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளும் நடைமுறைகளும் பின்பற்றப்படுதல் வேண்டும். | வைப்புக்களாக கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 100,000 பணம் சம்பந்தமாக உரிய வர்த்தமானி அறிவித்தலில் தேவையான திருத்தங்கள் செய்யப்படுகின்றது எனவும் கப்பல் முகவர் நிறுவனங்களிலிருந்து மேலதிக நேர வேலைப் படிகளை அறவீடு செய்தல் கணனி மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனவும் DOPL 218 F இலக்க மற்றும் திணைக்கள பணிப்புரையின் பிரகாரமும் கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பிரகாரம் அச்சிக்கல்கள் குறையும் வகையில் தடுத்து வைத்தல் பிரிவிலிருந்து நீக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்படுவதுடன் கப்பல் ஆவணங்கள் நிதி ஏற்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | | | நாளாந்தம் சுங்க அறிககை கட்டுப்பாட்டு பிரிவிற்கு அனுப்பி வைத்தல் முறையாக இடம் பெறுதலினை மேற்பார்வை செய்தல் இடம் பெறுக்கின்றது எனவும் தெரிவிக்கிறேன். |
| (உ) | இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் நியமச்சான்றிதழை வழங்குதல் தாமதமடைகின்ற இறக்குமதிப் பொருட்களுக்காக தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் அப்பொருட்களை தற்காலிகமாக இறக்குமதியாளர்களின் களஞ்சியத்திற்கு விடுவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தும் நியமங்கள் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அப்பொருட்களை உள்நாட்டுச் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் இது சம்பந்தமாக இலங்கை சுங்கத்தின் மேற்பார்வை போதுமானதல்ல என்பது கடந்த கணக்காய்வு ஐய வினா மற்றும் அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அந் நிலைமையை சரி செய்வதற்காக இலங்கை சுங்கம் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போதும் இவ்வாறான சம்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் போது ஒரு இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 702,084 பெறுமதியான Cut Edde Salad Salad Bowl இன் 913 அலகுகளை நியம சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உள்நாட்டுச் சந்தைகக்கு வழங்கப்பட்டிருந்தும் அப்பொருட்கள் நியமத்திற்கு இணக்கமற்றது என்பது நியமங்கள் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | - இறக்குமதி ஏற்றுமதி நடைமுறைகள் சம்பந்தமாக சுங்க உத்தியோகத்தர்களால் ஆக்கபூர்வமான பங்களிப்பு வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>- நியமச் சான்றிதழ்களின் தாமதத்தை தவிர்த்துக் கொள்வதற்காக இலங்கை சுங்கம் நேரடியாகச் சம்பந்தப்படுதல் வேண்டும்.<br><br>- துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பொருட்களுக்காக நியமச் சான்றிதழ் கிடைக்கும் வரை சுங்க உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்படுதல் வேண்டும்.<br><br>- நியமத்திற்குப் புறம்பான பொருட்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல்.<br><br>- நியமத்திற்குப் புறம்பான பொருட்களை சந்தைக்கு விடுவித்துள்ள தரப்பினர்கள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல். | இச் சம்பவம் தொடர்பாக புலனாய்வானது (ENSP/CPU/044/2017/CC/R-2466) இலங்கை சுங்கத்தின் பாவனையாளர் பாதுகாப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட இப் பொருட்களின் நியமங்கள் உறுதிப்படுத்தப்படும் வரை உள்நாட்டுச் சந்தைக்கு விடுவிக்கப்படுவதில்லை என இறக்குமதியாளர் பொறுப்புக்கு கட்டுப்படும் வகையில் கம்பனியின் ஒரு பிணை GLII/CG/261 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.<br><br>சுங்க வரிப்பணம் ஏதாவது காரணத்தின் அடிப்படையில் பின்னர் அறவீடு செய்வதற்குத் தேவைப்படுமாயின் அறவீடு செய்யும் தேவைப்பாட்டிற்காக இறக்குமதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆள் பிணைக்காகவே 439 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை தொடர்புபட்டதாகும். இப் பொருட்கள் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் சிபார்சின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனால் மேற்கூறிய சுற்றறிக்கையின் சிறப்பான விடயங்கள் பொருந்தியிருக்கவில்லை என்பதனை அவதானிக்கிறேன். நியமத்திற்கு முரணான பொருட்கள் இலங்கையில் சந்தைக்கு வருதல் மற்றும் அப் பொருட்களின் மூலம் பாவணையாளர்களுக்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | | | சிறந்த புரிந்துணர்வு சுங்கத்திணைக்களத்தின் பொதுப்பாவனை பாதுகாப்பு பிரிவிற்கு உள்ளதுடன் இந்த வகையில் பிழைகள் சம்பந்தமாக தண்டனை விதித்தல் மாத்திரம் போதுமானது அல்ல என்பது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. எனவே இலங்கை நியமங்கள் நிறுவனம் பாவணையாளர் விவகார அதிகார சபை, சுகதா மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு என்பவற்றுடன் அது சம்பந்தமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக தற்பொழுது கலந்துரையாடப்பட்டு வருகின்றது. |
| (ஊ) | இலங்கை சுங்கத்தில் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பாக போதியளவு மேற்பார்வை இல்லாமை, வருகைப் பதிவேடு, விடுமுறைப் பதிவேடு, மேலதிக நேர வேலைப்பதிவேடு, முதலியன முறையாகப் பேணப்படாமை. உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்த காலத்திற்காக மேலதிக நேர வேலைப் படிகள் செலுத்தியிருந்தமை, சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளைத் திறப்பதற்காக திறப்புக்கள் பொறுப்பேற்காதிருந்த விடுமுறைத் தினங்களுக்காகவும் மேலதிக நேர வேலைப்படிகள் செலுத்தியிருந்தமை ஆகிய பல உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. பல உத்தியோகத்தர்கள் 365 நாட்களும் சேவைக்கு சமூகமளித்திருந்தமை மற்றும் 24 மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலையில் ஈடுபட்டிருந்தமை ஆகிய | - நிதிமுறைகேடுகள் சம்பந்தமாக தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்ளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.<br><br>- ஊழியர் முகாமைத்துவம் சம்பந்தமாகக் காணப்படுகின்ற திருப்தியற்ற உள்ளகக் கட்டுப்பாடுகளை முறைமையைப் பயன்படுத்தல். | சுங்கத்திணைக்களத்தின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகைள மீண்டும் மீளாய்வு செய்து மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகளின் புதிய முறைமையைத் தயாரிப்பது தொடர்பாக எங்களால் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக (கடமை) பங்குபற்றியுள்ள உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற காலப்பகுதிக்குள் மேலதிக நேர வேலையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தொடர்பான மேலதிக நேர வேலை கையெழுத்து ஆவணங்களை அனுப்பியுள்ள பணிப்பாளர்களிடமிருந்து தற்பொழுது விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களிடமிருந்து அக்காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட்டுள்ள மேலதிக நேர வேலைப்படிகளை உடனடியாக மீளப் |

| | | |
|---|---|---|
| வழமைக்கு மாற்றமான நிலைமையும் அவதானிக்கப்பட்டது.<br><br>அவ்வாறான நிலைமையில் 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் 2313 உத்தியோகத்தர்களுக்காக சம்பளங்கள், வேதனங்கள், விடுமுறைநாள் சம்பளங்கள் மற்றும் படிகளாக அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திலிருந்து ரூபா 1,466,843,695 தொகையும் சுங்க மேலதிக நேர வேலை கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணம் மற்றம் தகவல் தொழில் நுட்ப தொடர்பாடல் நிதியததின் மூலம் ரூபா 830,750,547 தொகையுமாக ரூபா 2,297,594,242 கூட்டு மொத்த தொகையான செலவுகள் சம்பந்தமான உறுதிப்படுத்தும் பிரதான சான்றாகிய சேவைக்கு சமூகமளித்தல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது. |

## 4. நிறைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்காக இலங்கை சுங்கத் திணைக்களம் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டுவந்துள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தியிருக்கவில்லை | அரசாங்க கொள்கை மற்றும் உரிய அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |